*Kalanjiyam International Journal of Tamil Studies*
*An international, peer-reviewed quarterly academic research journal*
**ISSN: 2456-5148 (Online)**
**www.ngmtamil.in**

களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Quarterly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor 4.355 Multidisciplinary International
: https://doi.org/10.63300/kijts06022026

**Vol. 6 No. 02, August 2026, p457-462** | Available online at: www.tamilmanam.in
*Original Research Paper*

# சங்க இலக்கியத்தில் நடுகற்கள் - மீள்பார்வை

Heroic Stones in Sangam Literature - A Re-examination

**முனைவர் அ. உதயவாணி,**

உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழ்த்துறை, சேக்ரட் ஹார்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பேரணி, விழுப்புரம்.

**Dr. A. Udayavani*,**
*Assistant Professor, Postgraduate Department of Tamil,*
*Sacred Heart Arts and Science College, Perani, Villupuram*
*EMail: udhayavani424@gmail.com*

*Article history*
Received: 20-08-2026
Revised: 20-08-2026
Accepted: 24-08-2026
**Published: 25-08-2026**
*Corresponding Author Email: *udhayavani424@gmail.com*

**Abstract:** The human mind is like a fragile vine; it cannot stand alone or function independently. Its nature is to cling to something and flourish. Concepts such as magic, rituals, beliefs, and worship are the direct outcomes of the human psyche, coalescing over time into established traditions of worship. Just as humans evolved through various stages while living in harmony with nature, belief-based worship has similarly progressed. Evolving from nature worship to divine worship and the veneration of individuals, worship has secured an indispensable place in human life. In this context, references to heroic stones (Nadukarkal) are widespread throughout Sangam literature. Literary works bear witness to the practice of erecting stones to commemorate and worship warriors who died heroically in battle. This paper aims to analyze the records regarding these heroic stones.

**Keywords:** *Belief, Worship, War, Warriors, Heroic Stones (Nadukarkal), Memorial Stone (Veerakkal), Sangam Literature, Kaalkol (Selecting/purifying the stone), Kaatchi (Finding/exhibiting the stone), Muraippalichal (Worshipping), Slab, Naduthal (Erecting the stone).*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

**முன்னுரை**

மனித மனம் ஒரு வலிமையற்ற கொடியைப் போன்றது. அதனால் தனித்து நிற்கவோ தன்னிச்சையாகச் செயல்படவோ இயலாது. எதாவது ஒன்றைப் பற்றிக் கொண்டு படர்ந்து எழுவதே அதன் இயல்பாகும். மனித மனநிலையின் விளைவுகளே மந்திரம், சடங்கு, நம்பிக்கை, வழிபாடு முதலிய புனைவுகள் எனலாம். அவை தம்முன் ஒன்றிணைந்து உருப்பெற்று வழிபாட்டு மரபாகத் தோற்றம் பெற்றுள்ளது. இயற்கையோடு இயைந்து வாழத் தொடங்கிய மனிதன் பல்வேறு பரிணமாங்களைப் பெற்று வளர்ச்சியடைந்ததைப் போன்று நம்பிக்கை அடிப்படையில் தோன்றிய வழிபாடும் வளர்ந்தே வந்துள்ளது. இயற்கை வழிபாடு தொடங்கி இறை வழிபாடு, தனி மனித வழிபாடு என்று பல்கிப்பெருகி வாழ்க்கையில் பிரிக்க முடியாத ஒரு கூறாக வழிபாடு நிலைத்து நின்றுள்ளது. அவ்வகையில் சங்க இலக்கியங்களில் நடுகற்கள் பற்றிய செய்திகள் பரவிக் காணப்படுகின்றன. போரில் வீர மரணம் அடைந்தவர்களின் நினைவாகக் கல்லை வைத்து வழிபடத் தொடங்கினர் என்பதற்கு; இலக்கியங்கள் சான்று பகிர்;கின்றன. இனி நடுகற்கள் பற்றிய செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திரவுச்சொற்கள்:** நம்பிக்கை, வழிபாடு, போர், வீரர்கள், நடுகற்கள், வீரக்கல், சங்க இலக்கியங்கள், கால்கோள், காட்சி, முறைப்பழிச்சல், பலகை, நடுதல்.

**நடுகற்களின் காலம்**

தமிழகத்தில் சங்க காலம் தொட்டே (கி.மு. நான்காம் நூற்றாண்டு முதல்) வீரர்களுக்குநடுகல் எடுக்கும் வழக்கம் இருந்துள்ளது. நடுகல் நடும் முறைகள் பற்றி“காட்சிகால் கோள் நீர்ப்படைநடுகல் சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தலென்று இரு மூன்றுமரபிற் கல்லொடுபுணர”எனத் தொல்காப்பியம் தெளிவாக எடுத்துரைக்கிறது. மேலும் சங்க இலக்கியங்களும் நடுகற்களைப் பற்றிக் கூறுகின்றன. இதன் மூலம் நீத்தோர் நினைவாக நடுகற்கள் நடும் மரபு சங்க காலம்

முதற்கொண்டு தமிழகத்தில் இருந்து வந்துள்ளதை அறியமுடிகிறது. தமிழப் பல்கலைக்கழகம் கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையினரால் புலிமான் கோம்பையில் (தேனிமாவட்டம்,ஆண்டிப்பட்டிவட்டம்) மூன்று நடுகற்கள் கண்டறியப்பட்டன. இதன் காலம் கி.மு. 3-ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்டதாகும். இந்நடுகற்களே இந்தியாவின் இதுவரை கண்டு பிடிக்கப்பட்ட வற்றில் மிகப் பழமையானவை ஆகும்.

**சங்க இலக்கியங்களில் நடுகற்கள்**

முன்னோர்களைத் தெய்வமாக நினைத்து வழிபடுவது நடுகல் வழிபாடாகும். இங்கிலாந்துநாட்டவரான கிராண்ட் ஆலன் என்பவர் “கடவுளின் பரிணாமம்” (வுாந நுஎழடரவழைெ ழக புழன) என்ற தலை நூலில் ‘சமாதியின் மேல் நட்டுவைக்கப்பட்ட மரத்தலான முனைகள் தான் சிற்ப

வேலைபாடுகள் கொண்ட மரச்சிலைகள் தோன்றுவதற்குரிய திருப்புமையத்தை உருவாக்கி இருக்கக்கூடும். இனத்தவரால் பெரிதும் புனிதமாகப் போற்றப்படுகின்ற செமிடிக் கூர் உருளைகளும் மரத்துண்டுகளும் தோன்றுவதற்குக் கூட இந்த மரமுனைகள் தான் காரணமாகும். இதைப் போலவே சமாதியின் மேல் உருட்டி விடப்பட்ட வரலாற்றை அவை உறுதிப்படுத்தவில்லை என்றே தோன்றுகின்றது. ஆனால் சங்க இலக்கியங்களில் 'கல்நடுதல்' வழிபடும் முறைகள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

சங்க இலக்கியங்கள் கல் நடுதல் என்று குறிக்கும். போரில் வீர மரணம் அடைந்தவர்களின் நினைவாக அக்கல்லில் அவனின் பெயரையும் வீரத்தையும் பறை சாற்றும் வகையில் அக்கல்லில் பொறித்து அனைவரும் வழிபடத் தொடங்குவர்; தொல்காப்பியர்; நடுகல் வழிமுறையை ஆறாக் கூறுகிறார். இதனை,

"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்

--------------------------------------------

இருமூன்று மரபில் கல்லோடு புணர" (தொல்.புறத்திணையியல்)

அதாவது நடவேண்டிய கல்லை மலையில் இருந்து கண்டுடெத்து வந்து நீரில் கழுவி வீரனின் பெயரை குறிப்பிட்டு பூக்களைத் தூவி நடுகல்லினை வழிப்படத் தொடங்கியுள்ளனர். மேலும்

"ஆனா வென்றி அமரில்வீழ்ந் தோற்குக் கான நீளிடைக் கல்கண் டன்று"

(புற.பொ)

எனும் கொளுவில் பெரிய வெற்றியைப் பெற்ற போரில் வீர மரணம் அடைந்த விரனுக்கு செய்யக் காட்டில் கல்லைத் தேர்தெடுத்தல் பற்றி பேசுவதை இவ்விடத்தில் சுட்ட முடிகிறது. பண்டைய கால நாட்டின் வளர்ச்சியில் ஆநிரைகள் இன்றியமையாத இடம் பெறுவதால் நாட்டை கைப்பற்ற நினைக்கும் அரசன் அக்காலத்தில் ஆநிரைகளைக் கவர்வது முதற்படியாகும். சங்க காலத்தில் அடிக்கடிப் போர்கள் நிகழும். போரில் இறந்த வீரர்களுக்கு நடுகல் வைத்தனர். இதனால் நாடெங்கும் நடுகற்கள் காணப்படடுள்ளதை,

"நல்லமர் கடந்த நலனுடை மறவர்

--------------------------------------------

பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்" (அகம்.67:8-10)

எனவரும் பாடல் சான்று பகிர்கின்றது. உப்பு வாணிகர்கள் உப்பு மூட்டைகளை வண்டிகளில் ஏற்றி ஊர் ஊராகச் செல்லும் போது வழியில் நடுகற்கள் மேல் வண்டிச் சக்கரம் ஏறி இறங்கியதில்

நடுகற்களின் அச்சுப் படிந்திருப்பதையும் இவ்விடத்தில் கூற முடிகின்றது. மேலும் புறம். 20:20-21, 221, 223, 225:1-5, 224 260, அகம். 67, 131, 109, 387, மலைபடுகடாம் 394-95 என வரும் பாடல்கள் இதற்கு சான்றுகள் ஆகும். மேலும் ஆநிரைகளை மீட்டுத் தன் உயிரைத் துறந்தான். அவனுக்காகக் கற்கள் நிறைந்த மேட்டு நிலத்தில் நடுகல் நட்டு பெயரையும் எழுதி மயில் பீலியும் மலர் மாலையும் சூட்டி வீர வணக்கம் செலுத்தியதை,

“பரலுடை மருங்கில் பதுக்கை சேர்த்தி
மரல் வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொடு
அணிமயில் பீலி சூட்டிப் பெயர் பொறித்து
இனி நட்டனரே கல்லும்....” (புறம்.264)

எனும் பாடலடிகளில் இளம்பொன் வாணிகனார் கூறுவதை இவ்விடத்தில் சுட்ட முடிகின்றது. முற்றொரு பாடலில் போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரனின் நினைவாக நடப்பட்ட நடுகல்லில் மயிலிறகுச் சூட்டப்பட்டு வேல் நடப்பட்டிருந்த அழகை மதுரை இளநாகனார் (அகம்35) பாடலில் தெளிவாக கூறுவதை இவ்விடத்தில் காணமுடிகின்றது.

உலகிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் பிறப்பு இறப்பு என்பவை தவிர்க்க முடியாதவையாகும். மனிதனுக்குப் புகழ் மட்டுமே எஞ்சி நிற்கிறது. நிலையான உலகத்தில் தம் புகழை நிலைநிறுத்த விரும்பிய வீரர்கள் நிலையற்ற உடலையும் உயிரையும் போரில் இழக்க முன் வந்து தாம் கருதியவாரே அழியாத புகழைப் பெற்றனர். அவ்வாறு மடிந்த வீரனது புகழை நிலை நிறுத்தும் பொருட்டு நடுகல்லை நிறுவி வழிபட்டனர் என்பது இலக்கியங்களின் வழிக் கிடைக்கும் உண்மையாகும். சங்க இலக்கியப் பாடல்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் கி.மு. 180 முதல் கி.பி. 290 வரையுள்ள காலகட்டத்தைச் சார்ந்தவையாகும். அவற்றுள் பல பாடல்களில் நடுகல் பற்றிய செய்திகள் விரவிக் காணப்படுகின்றன.

முதன் முதலில் இத்தகைய கற்கள் வெறும் கற்பாறைகளாகவும் வெட்டி உருவாக்கப்படாத கற்துண்டுகளாகவும் கிடந்தன. பின்பு அவை ஒழுங்குபடுத்தப்பட்டு உருவம் செதுக்கப்பட்டன. இறந்தவர்கள் திரும்ப வந்து உயிரோடு இருப்பவர்களைத் துன்புறுத்தாமல் தடுக்கும் பொருட்டுதான் இந்தக் கற்பாறைகளைச் சவக் குழிகளின் மேல் உருட்டிவிட்டனர். நாளாக நாளாக இந்தக் கற்களைச் சதுர வடிவமான கற்பலகைகளாக ஒழுங்குபடுத்தினர். கடைசியாக இவைகளின் முன் மனிதத் தலையும் தோளும் பொருந்த்ிய கரடு முரடான பிரதிபிம்பம் செதுக்கப்பட்டு அழகுப்படுத்தப்பட்டன. என்று கரடு முரடான நடுகல் வழக்கம் உருவவழிபாடாக மாற்றமடைந்த நிலையைக் கிராண்ட் ஆலன் கருத்திலிருந்து நாம் அறிந்து கொள்ளமுடிகின்றது. நடுகல் வழிபாடே நாளடைவில் சிறு தெய்வ வழிபாடாக மாறியது. சிறு தெய்வ வழிபாடு நடுகல் வழிபாட்டின் வளர்ச்சிபோலும் என்று

தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழரின் வீர வழிபாட்டு அடிப்படையில் வீரக்கல் தெய்வங்கள் தோன்றின. பிற்காலச் சிறு தெய்வ வழிபாடு தோன்றுவதற்கு வீரக்கல் வழிபாடே காரணமாயிற்று என்று கைலாசபதி அவர்கள் கூறுவது இங்கே அறிய முடிகின்றது.

**பல்லவர் கால நடுகற்கள்**

தமிழர்கள் புறத்தாக்குதல்களிலிருந்து தங்களுடைய சமயம், கலை, மொழி பண்பாடுகளைக் காக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு இருந்ததைத் தமிழக வரலாறு தெளிவுபடுத்துகின்றது. ஆகவே பல்லவர் காலத்தில் பண்டைய தமிழர்களில் வீர உணர்வினை நிலைநாட்டும் சான்றுகளாக நடுகற்கள் மிகுந்து காணப்பட்டன.

**சோழர் கால நடுகற்கள்**

சோழர்களின் ஆட்சியல் தமிழகமக்களின் வாழ்வில் புதுத்திருப்பம் ஏற்பட்டது. கோயிற் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் சோழர் வரலாற்றிற்கு அரண் சேர்த்தது போல நடுகற்களுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் மெய்க்கீர்த்திகள் அமைந்தன. பல்லவர் கால நடுகற்களைப் போல் உள்நாட்டுப் பூசல் காரணமாக நடுகல் நட்டனர் என்று குறிப்பிடும் நடுகற்கள் இதுவரைகிடைக்கவில்லை. “ஆநிரைகளைக் கள்ளர் கொண்டு போகாமல் வீரர்கள் காத்தனர் என்ற செய்தியையும் இங்கு உணரவேண்டும். எனவே உள்நாட்டு அமைதிக்காகச் சோழர்கள் பெரிதும் முயன்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் அந்நாளில் மாபெரும் வீரர்கள் வழிபடும் வழக்குத் தலைதூக்கத் தொடங்கிய காலகட்டத்தில் தனிப்பட்ட வீரர்களைப் போற்றும் நெறி குறையத் தொடங்கியதைக் காணமுடிகின்றது” என்று லீலாவதி அவர்கள் கூறியுள்ளார்.

**பாண்டியர் கால நடுகற்கள்**

பாண்டியர் கால வீரக்கற்கள் தமிழகத்தில் தென் மாவட்டங்களில் காணப்படுகின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழி கழுகு மலை ஆகிய ஊர்களில் பாண்டிய கால நடுகற்கள் காணப்படுகின்றன. கோவில்பட்டி வட்டத்திலுள்ள இள வேலங்கால் என்னுமிடத்தில் 16 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சிற்பங்களுடன் கூடிய பல நடுகற்கள் கிடைத்துள்ளன. இதில் கல்வெட்டுகளுடன் கூடிய ஒன்பது நடுகற்கள் இருக்கின்றன. இவற்றில் பல திருநெல்வேலி பெருமாளுக்கும் அவனுக்கு அடங்காத சிற்றரசன் வெங்கலனுக்கும் நடந்த பல சண்டைகளை விவரிப்பனவாக உள்ளன’ என்று கே.வி. இராமன் கூறுகிறார்.

**நாயக்கர் கால நடுகற்கள்**

கோவை மாவட்டத்திலுள்ள நம்பியூர் கொடுவாய் போன்ற இடங்களில் நாயக்கர் கால நடுகற்கள் உள்ளன. என்பதைப் பதிவுசெய்துள்ளார்.

**இந்தியாவில் நடுகற்கள்**

இந்தியாவில் நடுகற்கள் அல்லது வீரக்கற்கள் வடக்கே இமாச்சலப் பிரதேசம் தொடக்கம் தெற்கில் கேரளமாநிலம் வரை காணப்படுகின்றன. வடக்கில் இமாச்சலப் பிரதேசம்,குசராத், மகாராட்டிரம் ஆகிய மாநிலங்கள் உட்பட்ட பல இடங்களில் இவை உள்ளன. தென்னிந்தியாவிலும் ஆந்திரா, கருநாடகம், தமிழ்நாடு, கேரளா ஆகிய நான்கு மாநிலங்களிலும் பழங்கால நடுகற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 2008 ஆம் ஆண்டில் முனைவர் கேசவராஜ் எழுதிய நூலின் அடிப்படையில் தென்னிந்தியாவில் கருநாடக மாநிலத்திலேயே அதிக அளவாக 397 நடுகற்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 202 கற்களும், ஆந்திராவில் 126 கற்களும், கேரளாவில் ஒரு கல்லும் அறியப்பட்டுள்ளன.

**முடிவுரை**

நாடு, இனம் காத்து இறந்துபட்ட போர் வீரர்களைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் பண்டைய காலத்தில் இருந்துள்ளது. மறவர்களின் வீரத்தையும் ,தியாகத்தைப் போற்றும் படி அவர்களது நினைவாகக் கல் நட்டு வழிபட்டனர். பண்டைய காலத்தில் அண்டை நாடுகளுடன் போரிட்டு வெற்றிபெறும் வீரர்கள் அங்குள்ள ஆடு,மாடுகளைக் கவர்ந்துகாட்டின் வழியாகக் கொண்டு வரும் போது புலி சிங்கம் முதலிய காட்டு விலங்குகள் வழி மறிக்கும் அவற்றுடன் சண்டையிட்டு உயிரிழக்கும் வீரனுக்கும் அந்த இடத்திலேயே நடுகள் நட்டு வழிபடுவது வழக்கமாக இருந்துள்ளதை மேற்காணும் வகையில் அறியமுடிகின்றது.

**பயன்பட்ட நூல்கள்**

[1]. ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை, தொகுதி-1, தொகுதி-2, உலகத்தமிழாராய்ச்சிநிறுவனம், சென்னை, 2010.

[2]. அ.மா. பரிமணம், கு.வே. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, தொகுதி -1, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்., சென்னை, 2004.

[3]. பக்தவத்சலபாரதி, பண்பாட்டுமானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003.

[4]. இளம்பூரணார், தொல்காப்பியம், கேளராப்பதிப்பகம், 2017.

**ஆசிரியர் அறிவிப்பு — நலன் முரண்பாடு பற்றிய கூற்று**

இக்கட்டுரையின் ஆசிரியர், இவ்வாய்வுக் கட்டுரையின் எழுத்துப்பணி தொடர்பாக எவ்வித நிதிசார், தனிப்பட்ட அல்லது தொழில்முறை நலன் முரண்பாடும் இல்லை என உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறார். இக்கட்டுரையானது முற்றிலும் கல்விசார் மற்றும் ஆய்வு நோக்கத்திற்காக மட்டுமே தயாரிக்கப்பட்டுள்ளது; இதற்கு எவ்வித நிதி உதவியோ, நிறுவன ஆதரவோ பெறப்படவில்லை. இதில் பயன்படுத்தப்பட்டுள்ள அனைத்து மூலநூல் மேற்கோள்களும், இணையவழி ஆதாரங்களும் அறிவுசார் நேர்மையுடன், உரிய சான்றுடன் இணைக்கப்பட்டுள்ளன.